1995 நவம்பர் 7]

இப்போது கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே, புதிதாக ஒரு நூற்பாலை துவங்குவதற்குரிய எண்ணம் அரசுக்கு இல்லை. ஆனாலுங்கூட, வடாற்காடு–அம்பேத்கார் மாவட்டத்திலும் 8 நூற்பாலைகள் இருக்கின்றன. அவற்றிலே ஒரு கூட்டுறவு நூற்பாலை இருக்கிறது. தனியார் நூற்பாலைகள் 7 இருக்கின்றன. அதுபோல, தனியார் யாராவது அமைக்க முன்வந்தால், அரசு தேவையான உதவியைச் செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 34, திருமதி இரா. பாண்டியம்மாள், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

34—

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரியை இயங்கச் செய்தல்

***19346*-திருமதி இரா. பாண்டியம்மாள்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரி சரியாக இயங்காததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இக்கல்லூரியை முறையாக இயங்கச் செய்ய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

முற்பகல் *10-45*

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கல்லூரி தற்போது முறையாக இயங்கி வருகிறது.

திருமதி இரா. பாண்டியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டித் தொகுதி பின்தங்கிய தொகுதி; பிற்பட்டோர் சமுதாய மக்கள் வாழ்கின்ற தொகுதி. எங்கள் தொகுதியில் ஒரே ஒரு கல்லூரி, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெயரில் இயங்கி வருகிறது. இந்தக் கல்லூரியில் இப்போது நிர்வாகம் சரிவர நடைபெறவில்லை என்று புகார்கள் சொல்லப்படுகின்றன. அந்தக் கல்லூரியில் இருக்கும் முதல்வர் அவர்களும் செயலாளர் அவர்களும் சரிவர செயல்படாமல் இருக்கிறார்கள்

என்று புகார்கள் அடிக்கடி வருகின்றன. நானும் அந்தக் கல்லூரியின் நிர்வாகக் குழு உறுப்பினராக இருக்கின்றேன்; சட்டமன்ற உறுப்பினராகவும் இருக்கின்றேன். அவர்கள் எந்த விஷயத்தையும் என்னிடம் கலந்து பேசுவதில்லை. அங்கு சரியான நிர்வாகம் இல்லை என்று எல்லோரும் சொல்கின்றார்கள். ஆகையால், அமைச்சர் அவர்கள் இதில் கவனம் செலுத்தி, எங்களுடைய இதய தெய்வம்-கள்ளர், மறவர், அகமுடையர் என்ற சொல்லையெல்லாம் மாற்றி தேவர் இனம் என்று அறிவித்து, எங்களுடைய தேவர் திருமகனுக்கு சென்னையிலே சிலை அமைத்து, தேவர் திருமகனுக்கு தமிழகம் முழுவதும் விழா எடுத்த எங்களுடைய இதய தெய்வம், எங்களுடைய தாய், எங்களுடைய தலைவி, இந்தக் கல்லூரியை நினைவில் கொண்டு, நல்லபடியாக சீர்செய்ய அரசு அதிகாரிகளை நியமனம் செய்து, இந்தக் கல்லூரி தமிழ்நாட்டின் முதன்மைக் கல்லூரியாக நடைபெற அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாகத்திலே இருக்கிற கோளாறு என்று சொன்னார்கள். நிர்வாகத்திலே இருப்பவர்கள் போட்டி மனப்பான்மையோடு நடந்து கொள்வதால்தான், அந்தக் கல்லூரியிலே நீண்டகாலமாகப் பிரச்சினைகள் இருந்து வந்திருக்கின்றன. 1982-லிருந்து 1991 வரை அரசு அதை ஏற்று நடத்தி இருக்கிறது. அதற்குப் பின்னால், 1991-லே ஒரு நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டு, 1992-லே மீண்டும் அதிலே பிரச்சினை வந்து, தலைவரை நீக்கிவிட்டு-இப்போது இருக்கிற நிர்வாகக் குழுவிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள், அரசு இந்த நிர்வாகத்தைச் சீரமைப்பதற்கு ஒரு விசாரணை அதிகாரியை, திரு. ஏ. பெருமாள் என்பவரை விசாரணை அலுவலராக நியமித்தபோது, அதை எதிர்த்து நிர்வாகம் நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்தது; நீதிமன்றத் தடையாணை பெறப்பட்டு இருக்கிறது. அந்தத் தடையாணையை விலக்குவதற்கு அரசு முழுமையான முயற்சிகளை எடுத்து வருகிறது. தடையாணை இருக்கும்வரை அரசு அதிலே மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியாது. ஆகவே, அரசுக்கு சாதகமாக நீதிமன்றத் தீர்ப்பு கிடைத்தவுடன் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி இரா. பாண்டியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரியில் போதிய வசதிகள் இல்லை; மோசமான கட்டிடங்களாக இருக்கிறது. அங்கு கட்டிட

1995 நவம்பர் 7]

வசதி செய்துதர வேண்டும்; நல்லபடியான வசதிகளை எங்களுடைய இதய தெய்வம் அவர்கள் செய்து தருவார்கள் என்ற நம்பிக்கையில், உசிலம்பட்டி மக்கள் அங்கு வாழ்ந்து வருகிறார்கள். நிச்சயமாக, பிறமலைக் கள்ளர் சமுதாய மக்களுக்காக இருக்கின்ற அந்தக் கல்லூரிக்கு நிதி உதவி செய்து, அங்கு ஒரு பெண்கள் கல்லூரியையும் நிறுவவேண்டும், பெண்கள் வந்து படிக்க வேண்டுமானால் பெரியகுளத்திற்கும் மதுரைக்கும் செல்கின்றார்கள்; ஒரு காலத்தில், 25 ஆண்டுகளுக்கு முன், நாங்கள் எல்லாம் கல்லூரிக்கு சென்றாலே, எங்களைக் கேவலமாகப் பார்க்கின்ற எங்களுடைய பகுதியில் இன்றையதினம் பெண்கள் அதிகமாகப் படிப்பதால் அரசு பெண்கள் கல்லூரி ஒன்றை அங்கு கொண்டுவருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையின் அடிப்படையில் கல்லூரி தொடங்குவதுபற்றி அரசு முடிவு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தேனி பன்னீர்செல்வம்.

திரு. தேனி பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தக் கல்லூரியினுடைய நிர்வாகத்திலே ஏற்பட்ட பிரச்சினைகள் குறித்து, தனி அலுவலர் நியமிக்கப்பட்டு, அந்தத் தனி அலுவலர் நியமனத்திற்கு தடை பெற்று இருப்பதாக அறிவித்தார்கள். எனவே, அங்குள்ள பிரச்சினைகளைத் தீர்க்கின்ற வகையில், அந்தப் பகுதியிலுள்ள அந்தச் சமுதாயத்தைச் சார்ந்த சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு உயர்மட்டக் குழுவினை அரசாங்கம் அமைத்து, அந்தக் குழுவினுடைய வழிகாட்டுதலின்பேரில் அந்தக் கல்லூரி சீராகவும் சிறப்பாகவும் இயங்குவதற்கு ஆவன செய்ய அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசாரணை அலுவலரை அரசுதான் நியமித்தது. அதை எதிர்த்துத்தான் அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணை பெற்று இருக்கிறார்கள். ஆகவே, மேற்கொண்டு இதிலே அரசு நேரிடையாகத் தலையிட இப்போதைக்கு வழி இல்லை. நீதிமன்றத் தீர்ப்பு கிடைத்தவுடன், அது அரசுக்கு சாதகமாக இருந்தால், அரசு உரிய நடவடிக்கைகள் எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 35, திரு. மு. நடேசன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.